## ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்கு

# கலை மற்றும் அறிவியல் கல்லூரி அறிவித்த முதல்வருக்கு நன்றி!

### சட்டப் பேரவையில் ஒட்டப் பிடாரம் தொகுதி உறுப்பினர் எம்.சி. சண்முகையா பேச்சு!

சென்னை, மார்ச் 31 -

சட்டப் பேரவையில் ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோர்க்கையில் தொகுதி உறுப்பினர் எம்.சி.சண்முகையா பேசுகையில் எனது தொகுதிக்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்த முதல்வருக்கு நன்றி என்று தெரிவித்துள்ளார்.

இது குறித்து பேரவையில் உறுப்பினர் எம்.சி. சண்முகையா பேசியதாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்கி, திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்கி, தமிழகத்தின் வருங்கால இளைய சூரியன், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களை வணங்கி, அவை முன்னவர் அவர்களையும், தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு கனிமொழி கருணாநிதி அவர்களையும், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் மாண்புமிகு அனிதா R. ராதாகிருஷ்ணன் அவர்களையும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் மாண்புமிகு கீதாஜீவன் அவர்களையும், இந்தத் துறையினுடைய அமைச்சர் மாண்புமிகு இ. பெரியசாமி அவர்களையும், அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு மாற்றுத் தலைவர், அரசு கொறடா, சக சட்டமன்ற உறுப்பினர்களையும், என்னை இரண்டாவது முறையாக வெற்றி பெறச் செய்த எனது தொகுதி வாக்காளர் எஜமான் பெருமக்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் தொகுதி மக்களின் நலன் கருதி, ஒட்டப்பிடாரத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அறிவித்த எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும், தூத்துக்குடி மக்களின் சார்பாகவும், கோடான கோடி நெஞ்சார்ந்த நன்றியை சமர்ப்பிக்கின்றேன்.

திராவிட மாடல் அரசின் முக்கிய சாதனைத் திட்டங்கள். கலைஞரின் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்மூலம் மாதந்தோறும் ரூபாய் ஆயிரம், நகரப் பேருந்துகளில் மகளிர் விடியல் பயணம், புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் திட்டம் மூலம் மாதம் ஆயிரம்ரூபாய்,முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், வேளாண்மைத் துறைக்கு தனி நிதிநிலை அறிக்கை, நான் முதல்வன் திட்டம், இல்லந்தேடி கல்வித் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், முதலமைச்சரின் கிராமச் சாலை மேம்பாட்டுத் திட்டம், இன்னுயிர் காப்போம்நம்மை காக்கும் 48, கலைஞரின் கனவு இல்லம் இதுபோன்ற மகத்தான திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

இதனால் வாக்களித்த மக்களும், வாக்களிக்காத மக்களும் பல்வேறு திட்டங்களின்மூலம் பயன்பெறுகிறார்கள். வாக்களிக்காத மக்கள் ஏன் வாக்களிக்கவில்லை என்று வருத்தப்படுகிறார்கள்.

சொல்வதையும் செய்வோம்; சொல்லாததையும் செய்வோம், இதுதான் திராவிட மாடல் ஆட்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக மற்றும் ஊராட்சித் துறை மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள் குறித்த விவாதத்தில் எனது உரையைத் தொடங்குகிறேன்.



2025-2026 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஊரக மற்றும் ஊராட்சித் துறைக்கு 29,465 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடுச் செய்யப்பட்டுள்ளது. ஓலைக் குடிசைகளில் வசிக்கும் ஏழைக் குடும்பங்கள் குறித்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்மீது கொண்டிருந்த கருணையினாலும், குடிசையில்லாத தமிழ்நாடு அமைத்திட வேண்டுமென்ற அவரது பெருங்கனவினை நினைவு கூரும் வகையில் கடந்த ஆண்டு கலைஞரின் கனவு இல்லம் என்று ஒரு புதிய திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் 8 இலட்சம் concrete வீடுகள் கட்டித் தரும் நோக்கத்துடன், சென்ற ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு இலட்சம் புதிய வீடுகள் கட்டும் பணிகள் அனைத்து மாவட்டங்களிலும் விரைவாக நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்மூலம் ஒரு இலட்சம் புதிய வீடுகள் 3,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் தொடங்கப்படும் என்று அரசாணை பிறப்பிக்க ப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் கடைக்கோடி குக்கிராமங்களையும் சென்றடையும் வகையில், தரமான சாலை வசதிகளை உருவாக்கிடும் நோக்கில், அறிமுகப்படுத்தப் பட்ட முதல்வரின் கிராமச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், இந்த ஆண்டு 6,100 கிலோ மீட்டர் நீளமுள்ள கிராமச் சாலைகளுக்கு 2,200 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் ஊரகப் பகுதியில் 2001 ஆம் ஆண்டிற்கு முன்னர் பல்வேறு அரசுத் திட்டங்களின்கீழ் விளிம்பு நிலை மக்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகளை, தங்களால் சீரமைக்க முடியாமல் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ள வீடுகளுக்கு மாற்றாக புதிய வீடுகள் கட்டித் தரும் இந்த ஆண்டுத் திட்டத்தின்கீழ் 25,000 புதிய வீடுகள் ரூபாய் 600 கோடி மதிப்பீட்டில் கட்டித் தரப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்2 இன்கீழ் இந்த ஆண்டில் 2,329 கிராம ஊராட்சிகளுக்கு 1,087 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்களினால் பல்வேறு தொழில் தொடங்கப்பட்டு பொருளாதாரம் மேம்படுத்தப்படுகிறது. ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ திட்டத்தின்கீழ் பல்வேறு திட்டப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனது தொகுதியின் கோரிக்கைகளை இந்த மாமன்றத்தில் பதிவு செய்கிறேன். அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் எனது தொகுதியின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகா, விக்கிரம சிங்கபுரம், தாமிரபரணி ஆற்றின் உபரி வெள்ள நீரை கோடைமேல்அணையான் வடக்கு அணைக்கட்டிலிருந்து கடனா நதி, சிற்றாறு, உப்போடை, கல்லாறு மற்றும் வைப்பாறு ஆகியவற்றை உபரி வெள்ள நீர் புவியீர்ப்புக் கால்வாய்மூலம் இணைப்பதால் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள வறட்சித் தொகுதியான ஒட்டப்பிடாரம் தொகுதி, விளாத்திக்குளம் தொகுதி பாசன வசதி பெறும்; குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும்; தொகுதி மக்களின் பொருளாதார நிலையும் மேம்படும். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் தாமிரபரணி ஆறு ஓடுகிறது. அங்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் கிடைக்கக்கூடிய குடிநீர் சரியாக கிடைப்பதில்லை. உள்ளூர் நீராதாரம்மூலம் கிடைக்கக்கூடிய நீர் பயன்பாட்டிற்கு உகந்ததாக இல்லை. ஆகவே, தாமிரபரணி ஆற்றில் அகரம் அருகே நீரேற்று நிலையத்தினை அமைத்து ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி, கருங்குளம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் உருவாக்கித் தரப்படவேண்டும். மருவூர் அணைக்கட்டிலிருந்து மேலக்கால், கீழக்கால், வடகால் பாசன கால்வாய் தூர்வாரி concrete தளம் அமைத்து மதகுகளைப் பராமரிப்பு செய்து, குளங்களின் கரைகளைப் பலப்படுத்தி, புதிய மதகுகள் அமைத்துத் தரப்பட வேண்டும்.

எனது தொகுதியின் தருவைகுளம் கிராமத்தில் பெரும்பாலானோர் மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர். இங்கு 275 விசைப்படகுகளும், 170 நாட்டுப் படகுகளும் உள்ளன. அடிக்கடி கடல் சீற்றம் ஏற்படுவதால் குடியிருப்புகளின் அருகே கடல் நீர் வருகிறது. மேலும், அரசுக் கட்டடங்கள், வலைப்பின்னும் கூடாரங்கள் சேதம் அடைந்துவிட்டன. இதனால், அரிப்பு ஏற்பட்டு மணல் திட்டுக்கள் உருவாகி படகுகள் சேதமடைகின்றன. ஆகவே, தருவைகுளம் கிராமத்தில் தூண்டில் வளைவு அமைத்துத் தரப்பட வேண்டும். மீன் பிடி இறங்குதள பகுதியில் மூன்று உயர்கோபுர மின் விளக்குகள் அமைக்க வேண்டும். புதிய துறைமுகம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு விரைந்து ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

தாமிரபரணி ஆற்றின் மருவூர் அணைக்கட்டிலிருந்து கீழக்கால், பத்மனமங்கலத்திலிருந்து பேய்குளம் வரை புறவழி பாசன கால்வாய் அமைத்துத் தரவும், பேய்குளம், குலேந்திர நேசர்குளம் குளம், கோரம்பள்ளம் குளம் ஆகிய குளங்களை ஆழப்படுத்தி கரைகளைப் பலப்படுத்த வேண்டும். மருவூர் அணைக்கட்டிலிருந்து மேலக்கால், கீழக்கால், வடகால் தூர்வாரி புதிய மதகுகள் அமைத்து, மதகுகளை பராமரிப்புச் செய்து concrete தளம் அமைத்துத் தரவும், அப்பகுதிக்குட்பட்ட குளங்களை ஆழப்படுத்தி கரைகளைப் பலப்படுத்த வேண்டும்.

மருவூர் அணைக்கட்டு மேலக்கால், கீழக்கால் பல்வேறுப் பகுதிகளில் படித்துறைகள் அமைத்துத் தரப்பட வேண்டும். ஒட்டப்பிடாரத்தை மையமாகக் கொண்டு அரசு போக்குவரத்துப் பணிமனை அமைக்க வேண்டும். தூத்துக்குடி தாலுகா பெரிய தாலுகாவாக இருப்பதால் தூத்துக்குடி தாலுகா அலுவலகத்தைப் பிரித்து வாகைகுளத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தாலுகா உருவாக்கப்பட வேண்டும்.

ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம் பெரிய ஒன்றியமாக இருப்பதால் ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்து வாஞ்சிமணியாச்சித் தலைமையிடமாகக் கொண்டு புதியதாக ஊராட்சி ஒன்றியம் உருவாக்கப்பட வேண்டும்.

எனது தொகுதியில் சிறு விளையாட்டரங்கம் அமைக்கப்பட வேண்டும். ஒட்டப்பிடாரத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித் துறை நடுவர் நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் கட்டவும், புதியம்புத்தூரில் ஆயத்த ஆடை சந்தை அமைக்கவும், மலைப்பட்டி, கோரம்பள்ளம் குளம், உப்பாற்று ஓடை மற்றும் செக்காரக்குடி, பேரூரணி வரத்துக் கால்வாய்களைத் தூர்வாரி, பல்வேறு இடங்களில் பெரிய தடுப்பணைகள் அமைக்க வேண்டும். ஒட்டப்பிடாரத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ.சி. இல்லத்தில் உள்ள முழு நேர கிளை நூலகத்தில் புத்தகம் வாசிக்க வரும் வாசகர்களுக்கு அமர்ந்து படிப்பதற்கு கூடாரம் அமைத்துத் தர வேண்டும். பாஞ்சாலங்குறிச்சியில் சுதந்திரப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையில் அடிப்படை வசதிகள் செய்து, புதிதாக 2 தோரண வாயில்கள் கட்டித் தர வேண்டும். குறுக்குசாலையில் உள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் நுழைவுவாயில் மிகவும் சேதமடைந்துள்ளது. அதைப் புனரமைப்பு செய்து தர வேண்டும். கவர்னகிரியில் சுதந்திரப் போராட்ட வீரர் சுந்தரலிங்கம் வாரிசுதாரர்களுக்கு குடியிருப்பு, அனைத்து தெருக்களுக்கும் சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவுநீர் வாய்க்கால் அமைத்துத் தர வேண்டும். மேலும், மணிமண்டபத்தில் பூங்கா, கலையரங்கம் அமைக்க வேண்டும். வல்லநாட்டில் அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத்தேவர் மணிமண்டபத்திற்கு புதிதாக தோரண வாயில், சிறுவர் பூங்கா, மணிமண்டபத்தைச் சுற்றி paver block அமைத்துத் தர வேண்டும். கிள்ளிகுளம் வ.உ.சி. வேளாண்மைக் கல்லூரி மற்றும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், வேளாண்மைப் பல்கலைக் கழகமாக தரமுயர்த்தப் பட வேண்டும். தருவைகுளம், வெள்ளப்பட்டி, கிழக்குக் கடற்கரைச் சாலையில் புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டும். ஒட்டப்பிடாரத்தில் தீயணைப்பு நிலைய கட்டடம் கட்ட வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட ஒட்டப்பிடாரம், சவலாப்பேரி, செக்காரக்குடி, முடிவை த்தானேந்தல்,

குறுக்குசாலை, தருவைகுளம், சோரிஸ்புரம் அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் நபார்டு திட்ட த்தின்மூலம் புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை 3 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய தொகுதி சார்ந்த மேலும் சில கோரிக்கைகள் உள்ளன. அவற்றை இம்மாமன்றத்தில் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

ஒட்டப்பிடாரம் ஏ. குமாரகிரி, வல்லநாடு தெய்வச்செயல்புரம், சவலாப்பேரி போன்ற கிராமப் பகுதிகளில் நூலக கட்டடம் அமைத்து தர வேண்டும். தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் ITI பக்கத்தில் சுற்றுலா மாளிகை அமைத்து தர வேண்டும். ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட குலையன்கரிசல், அத்திமரப்பட்டி, வல்லநாடு போன்ற பகுதிகளில் நெல் கொள்முதல் நிலைய கட்டடங்கள் கட்டித் தர வேண்டும். பேரூரணி காவல் பயிற்சி பள்ளியில் சாலைகள் அமைத்தும், கட்டடங்கள் பராமரிப்பு செய்தும் தர வேண்டும். காவல் பயிற்சியாளர்களுக்கு படுக்கையுடன் கூடிய புதிய கட்டில்கள் வழங்க வேண்டும். வல்லநாட்டில் கால்நடை மருந்தகம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டித்தர வேண்டும்.

பண்டாரம்பட்டி, A.M. பட்டி, முப்புலிவெட்டி, முடிவைத்தானேந்தல், வடக்குகாரசேரி, காசிலிங்காபுரம், தன்னூத்து, வசவப்புரம் ஊராட்சி, அம்பேத்கர்நகர், கீழத்தட்டாப்பாறை போன்ற பகுதிகளுக்கு ஆதி திராவிடர் நலத் துறையின்மூலம் கிராம அறிவு மைய கட்டடம் (Village Knowledge Centre) அமைக்க வேண்டும். ஒட்டபிடாரத்தில் நெடுஞ்சாலைத் துறையின் பயணியர் தங்கும் மாளிகை கட்டித் தர வேண்டும். ஒட்டபிடாரத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகளுக்கான கட்டடம் கட்டித் தர வேண்டும்.

புதியம்புத்தூர்ஒட்டப்பிடாரம் செல்வதற்கு நெடுஞ்சாலைத் துறைமூலம் புதியம்புத்தூரில் புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டும். தூத்துக்குடி மாநகராட்சி, புறநகர் பேருந்து பணிமனையில் சுற்றுச்சுவர், தரை தளம் பேவர் பிளாக் அமைக்கப் பட வேண்டும்.

தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பணிமனையில் தலைதளம் பேவர் பிளாக் அமைக்கப் பட வேண்டும். புளியம்பட்டி, சவலாப்பேரி அருகே துணை மின் பகிர்மான நிலையம் அமைத்து தர வேண்டும். அயிரவன் பட்டியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டும்.

எனக்கு இம்மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும்; 2026 ஆம் ஆண்டு மீண்டும் திராவிட மாடல் ஆட்சியே தொடர்ந்து அமையும் என்று சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அவர் பேசினார்.

---

## தமிழ்நாட்டின் நலனே முக்கியம் என்றால்

# ‘நீட்’ தேர்வை ரத்து செய்தால்தான் கூட்டணி என பா.ஜ.க.விடம் உறுதியைப் பெற்று எடப்பாடி பழனிசாமி அறிவிப்பாரா?

### அமைச்சர் தங்கம் தென்னரசு கேள்வி!

சென்னை, மார்ச் 30-

தமிழ்நாட்டின் நலன்களே முக்கியம் என்றால் நீட் தேர்வை ரத்து செய்தால்தான் கூட்டணி என்று உறுதியைப் பெற்றுக் கொண்டு பா.ஜ.க.வுடன் கூட்டணி வைக்க தயாரா? என எடப்பாடி பழனிசாமிக்கு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்திருப்பதாவது:-

ஒன்றியத்தில் இந்தியா கூட்டணியின் ஆட்சியமைந்தால் ‘நீட் தேர்வு ரத்து செய்யப்படும்’ என்று கழகத் தலைவர் உறுதியளித்திருந்தார். அதே உறுதிமொழியை ராகுல் காந்தி அவர்களையும் அளிக்கச் செய்திருந்தார்.



டெல்லியில் மூன்று கார்களை மாற்றி மாற்றிச் சென்று ‘பிரத்தியேகமாக யாரையும் சந்திக்க வரவில்லை’ என்று சொல்லிவிட்டு இரவோடு இரவாக உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களைச் சந்தித்த எடப்பாடி பழனிசாமி அவர்களே!

பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி அமையும் என்று அமித்ஷா இன்றுகூடச் சொல்லியிருக்கிறார். தமிழ்நாட்டின் நலன்களே உங்களுக்கு முக்கியம் என்றால் நீட் தேர்வை ரத்து செய்தால்தான் கூட்டணி என்று உறுதியைப் பெற்றுக் கொண்டு கூட்டணி வைக்க நீங்கள் தயாரா?.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு கேள்வி எழுப்பியுள்ளார்.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க மதுரை தெற்கு மாவட்டம் தி.குன்னத்தூரில் 100 நாள் வேலை உறுதி திட்டத்திற்கு நிதி ஒதுக்காத ஒன்றிய அரசை கண்டித்து மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர், திரளான கிராம மக்கள் பங்கேற்றனர்.

---

## நெல்லை மத்திய மாவட்டத்தில்

# பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

நெல்லை, மார்ச் 31 -

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க,

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டு தலின்படி,நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என்.நேரு ஆலோசனைப்படி நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட பாளையங்கோட்டை, திருநெல்வேலி ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் பாக முகவர்கள் கூட்டம் இன்று 31ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10 மணி அளவில் பாளையங்கோட்டை வ.உ.சி மைதானம் அருகில் உள்ள பி.பி.எல். திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத்தலைவர் வி.கே. முருகன் தலைமையில் தொகுதி பார்வையாளர்கள் வசந்தம் ஜெயக்குமார் (பாளை) முத்துச்செல்வி (நெல்லை)ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.தெரிவித்துள்ளார்.

அது பற்றி அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

நெல்லை மத்திய மாவட்டம் திருநெல்வேலி பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதிகளின் பாக முகவர்கள் கூட்டம் இன்று 31ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10 மணி அளவில் பாளை வ.உ.சி மைதானம் அருகில் உள்ள பி.பி.எல். மண்டபத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, பகுதி, பேரூர், ஒன்றிய, வட்ட, கிளைக் கழக நிர்வாகி கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் அவசியம் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தென்காசி தெற்கு மாவட்டம், கீழப்பாவூர் கிழக்கு ஒன்றியம் தி.மு.க. சார்பில் 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்து தலைமைச் செயற்குழு உறுப்பினர் பூ.ஆறுமுகசாமி தலைமையில் அத்தியூத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. இதில் மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளரும் ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாள ருமான கே.கணேஷ் குமார் ஆதித்தன் கண்டன உரை ஆற்றினார். கீழப்பாவூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சிவன் பாண்டியன் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்திருந்தார். இதில் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்று கண்டன முழக்கமிட்டனர்.



100 நாள் வேலை உறுதித் திட்டத்தை குறைத்து அதற்கு தர வேண்டிய ரூ.4034 கோடியை தர மறுக்கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஆண்டிபட்டி அருகே ரெங்கசமுத்திரம் கிராமத்தில் ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் தலைமையில் நடைபெற்றது. இதில் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் செஞ்சுரி செல்வம்,விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் சேது ராஜா,மாணவரணி மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ், பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.